த.வெ.க.வினரிடமிருந்து பெண்களைக் காப்பாற்றத் திரண்ட கழக மகளிர் அணி!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனையின்படியும், தமிழ்நாட்டில்சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளைக் கண்டித்து, நாமக்கல்லில் திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அவிநாசி மருத்துவர் கோகிலா மணி தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி அமைப்பாளர்கள் ஜோதிலட்சுமி, ஜோதி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் கௌரி வெங்கடாசலம், ராதிகா சக்திவேல், மாநில கல்வியாளர் அணி துணை செயலாளர் சுதா ஜெயக்குமார், நகர்மன்ற தலைவர்கள் நளினி சுரேஷ்பாபு, கவிதா சங்கர் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் வரவேற்புரையில், த. வெ. க. அரசைக் அண்டித்து, பழைய பேருந்து நிலையம் அருகில், மாவட்ட மகளிர் அணி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மகளிரணி, மகளிர் தொண்டரணி யினர் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



த.வெ.க அரசை கண்டித்து, நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமதி வரவேற்றார், தலைமை கழக பிரதிநிதி கோவை வைஷ்ணவி கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் போஜன், லட்சுமி, நாசர் அலி, இளங்கோவன், திராவிடமணி, தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு உள்ளிட்ட கழகத்தினர் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஜெயந்தி நன்றி கூறினார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காஞ்சிபுரம் மாநகராட்சியில் மேயர் மகாலட்சுமி யுவராஜ் தலைமையில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள். பெண் குழந்தைகள் பாதுகாப்பு இன்மை விலைவாசி உயர்வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர், நிவேதா ஜெசிகா, கண்டன உரையாற்றினார்கள் உடன் திருமதி மலர்விழி குமார், திருமதி செம்பருத்தி துர்கேஷ், திருமதி நித்யா சுகுமார் , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆ.செல்வி மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மாலதி செல்வராஜ் திருமதி மல்லிகா ராமகிருஷ்ணன் மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மயிலாடு துறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்..ஏ., வழிகாட்டுதலின் படி நிர்வாக திறமையற்ற டம்மி முதல்வர் விஜய் ஆட்சியில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள், பெண்குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வு மற்றும் கட்டுக்கடங்கா போதை பொருள் நடமாட்டம் கண்டித்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் அலுவலகம் முன் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சாந்திராமலிங்கம், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் தீபா சத்தியேந்திரன் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் தலைமை கழகத்தின் சார்பில் தலைமைக் கழக பேச்சாளர் ஏ.ஆர் தீன் ஷாநூஃப் மற்றும் கொள்ளிடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மலர்விழி திருமாவளவன், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியை சேர்ந்த துணை அமைப்பாளர்கள், மகளிர்கள், கழகத்தின் உள்ளனர்.



சேலம் கோட்டை மைதானத்தில் சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன், சேலம் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி. எம். செல்வகணபதி, சேலம் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான எஸ். ஆர். சிவலிங்கம் ஆகியோர் தலைமையில் ஆயிரக்கணக்கான மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர் கலந்து கொண்டு த.வெ.க அரசின் நடவடிக்கையை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க மகளிர் தொண்டர் அணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.



தமிழ்நாட்டில் தற்பொழுது நிலவும் ரீல்ஸ் ஆட்சியில் சட்டம் ஒழுங்குச் சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் தினந்தோறும் அவதிப்படும் நிலைமையை உண்டாக்கிய த.வெ.க. அரசைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெனஸ் மைக்கேல் தலைமையில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா கலைவாணன் முன்னிலையில் நடைபெற்றது. மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் கலந்து கொண்டு த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கண்டன உரையாற்றி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மகளிர் அணி நிர்வாகிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், மகளிருக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.